**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**13 மே 2016 / 06 ஷஃபான் 1437**

# முஸ்லிம் அல்லாதவர்களுடன் பழகும் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகள்

اَلْحَمْدُ للهِ الْغَنِيِّ الْحَمِيْدِ وَأَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلاَّ اللهُ وَحْدَهُ لاَ شَرِيْكَ لَه، وَهُوَ عَلَى كُلِّ شَيْءٍ شَهِيْد، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُه المَبْعُوثُ بِالرَّحْمَةِ وَالْقَوْلِ السَّدِيْد، اَللّٰهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ وَسَلِّمْ تَسْلِيْمًا كَثِيْرًا. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ اتَّقُوْا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوْتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُوْن.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளை நிறைவேற்றுவதன் மூலமாகவும் அவனால் தடைசெய்யப்பட்டுள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீதான நமது ”தக்வா” (பக்தியை) உச்சகட்டமாக ஏற்படுத்திக் கொள்வோமாக! ”தக்வா” வின் பொருட்களில் ஒன்று, ”அல்லாஹ் நம்முடன் இருக்கின்றான்” என்ற இறை உணர்வுடன் காணப்படுவதாகும். அல்லாஹ் நம்முடன் இருக்கின்றான் எனும் உணர்வு பள்ளிவாசல்கள், தொழுகை விரிப்புகளில் நாம் இருக்கும் போது மட்டும்

ஏற்பட வேண்டியதல்ல. நாம் எங்கிருந்தாலும், எப்போதும் நமது உள்ளங்களில் உணரப்பட வேண்டியதாகும்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள ஜமாஅத்தார்களே!

கடந்த வாரப் பிரசங்கத்தில் மனிதர்களிடம் காணப்படும் பன்முகத் தன்மையைப் பற்றி விவாதிக்கப்பட்டது. நாம் மற்றவர்களுடன் பழகும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விஷயங்களை அல்லாஹ் எவ்வாறு நினைவூட்டுகிறான் என்பது பற்றியும் விவாதிக்கப்பட்டது. இன்று, அந்த நினைவூட்டுதலுக்கு மேற்கொண்டு விளக்கமளிக்கும் வகையில், முஸ்லிம் அல்லாதவர்களுடன் பழகும் போதும், பேசும் போதும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்பதை விவரிக்க விரும்புகிறேன்.

தாம் எவ்வாறு படைக்கப்பட்டுள்ளோம் என முஸ்லிம்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமெனவும், அல்லாஹ்வின் பாதையின் பால் அவர்கள் திரும்ப வேண்டுமெனவும் திருக்குர்ஆன் அடிக்கடி அழைப்பு விடுக்கின்றது. அவ்வாறு சிந்திப்பதானது, அவர்கள் தம்மைச் சுற்றிக் காண்கின்ற அல்லாஹ்வின் அத்தாட்சிகளை உண்மையாக அறிவதற்கும், தமது தவறுகளை நினைத்து வருந்துவதற்கும் உதவியாக இருக்கும் எனும் நோக்கில் திருக்குர்ஆன் அவ்வாறு அழைப்பு விடுக்கின்றது.

முஸ்லிம்கள், முஸ்லிமல்லாதவர்களுடன் தொழிற்கூடங்கள், கல்விக் கூடங்கள், அண்டை வீடு போன்ற எந்த இடங்களில் பழகினாலும் அவர்கள் அல்லாஹ்வின் நினைவூட்டுதலை நினைவில் கொள்வது அவசியமாகும். குறிப்பாக, மற்றவர்களின் மத சுதந்திரத்தைக் கவனத்தில் கொள்வது அவசியமாகும். இது சம்பந்தமாக அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

## لاَ إِكْرَاهَ فِي الدِّينِ

பொருள்: (இஸ்லாமிய) மார்க்கத்தில் (எவ்வகையான) நிர்ப்பந்தமுமில்லை. (அல்-குர்ஆன்: அத்தியாயம்: அல்-பகரா, வசனம்: 256)

மேற்கண்ட வசனத்தைப் பற்றி ஷைக் முஹம்மது ரசீத் ரிளா (ரஹ்) அவர்கள் தனது "தப்சீருல் மனார்" எனும் திருக்குர்ஆன் விரிவுரையில் விவாதித்துள்ளார்கள். இஸ்லாமிய மார்க்கத்தை ஏற்றுக் கொள்வது எவருக்கும் நிர்ப்பந்தமான விஷயமல்ல என்பது இஸ்லாமியக் கொள்கையில் மிகவும் முக்கியமானதாகும்; அக்கொள்கைக்குக் கட்டுப்பட்டு நடப்பது அவசியமாகும் எனக் கூறியுள்ளார்கள். எனவே, நாம் எவரையும் இஸ்லாத்தை ஏற்குமாறு நிர்ப்பந்திக்க முடியாது. நமது குடும்பத்தார் முதற்கொண்டு எவரையும் அவர்களின் மார்க்கத்தை விட்டு வெளியேறுமாறும் கட்டாயப்படுத்த முடியாது.

இஸ்லாத்தை மற்றவர்களுக்கு விளக்குவது இஸ்லாமிய அழைப்புப் பணியின் முக்கிய அம்சமாகும். இஸ்லாத்தை ஏற்காதவர்களுக்கு இஸ்லாம் தெளிவாக்கப்பட வேண்டும்; தவறான வழிகாட்டுதலிலிருந்து உண்மை வெளிப்பட வேண்டும் என்பதே அந்த அழைப்புப் பணியின் நோக்கமாகும். எனவே, இஸ்லாத்தை ஏற்பதும் ஏற்காமலிருப்பதும் அவர்களின் விருப்பமாகும்.

இஸ்லாமிய மார்க்கத்தில் இணையுமாறு எவரையும் இஸ்லாம் நிர்ப்பந்திக்கவில்லை என்பதையும், ஒருவர் மற்றவருக்கு மரியாதை

செய்வது அவசியம் என இஸ்லாம் கூறுவதையும் மேற்கண்ட வசனம் சுட்டிக்காட்டுகிறது. இதனடிப்படையில் தான், மற்றவர்கள் எவற்றை வணங்குகிறார்களோ அவற்றை அவமதிக்கக் கூடாது என அல்லாஹ் தடை செய்கிறான். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா திருக்குர்ஆனின் ”அல்-அன்ஆம்” எனும் அத்தியாயத்தின் 108-வது வசனத்தில் கூறுகின்றான்:

وَلَا تَسُبُّوا الَّذِينَ يَدْعُونَ مِن دُونِ اللَّهِ فَيَسُبُّوا اللَّهَ عَدْوًا بِغَيْرِ
عِلْمٍ كَذَٰلِكَ زَيَّنَّا لِكُلِّ أُمَّةٍ عَمَلَهُمْ ثُمَّ إِلَىٰ رَبِّهِم مَّرْجِعُهُمْ فَيُنَبِّئُهُم
بِمَا كَانُوا يَعْمَلُونَ ﴿١٠٨﴾

பொருள்: அவர்கள் அழைக்கும் அல்லாஹ் அல்லாதவற்றை நீங்கள் திட்டாதீர்கள்; (அப்படித் திட்டினால்) அவர்கள் விளங்காமல், வரம்பை மீறி அல்லாஹ்வைத் திட்டுவார்கள் - இவ்வாறே ஒவ்வொரு சமூகத்தாருக்கும் அவர்களுடைய செயலை நாம் அழகாக ஆக்கியுள்ளோம் - பின்பு அவர்களுடைய மீட்சி அவர்களின் இறைவனிடமே இருக்கிறது. அப்போது அவர்கள் செய்ததை அவர்களுக்கு அவன் அறிவிப்பான்.

மேற்கண்ட வசனத்தின் மூலம் நாம் பல பாடங்களைப் பெறக் கடமைப்பட்டுள்ளோம். அவற்றில் ஒன்று, மற்றவர்களின் நம்பிக்கைகளை நாம் அவமதிப்பதோ, கேலி செய்வதோ கூடாது என்பதாகும். காரணம், அவ்வாறு செய்வதால் இஸ்லாத்திற்கு எவ்வித நன்மையும் கிடைக்கப்

போவதில்லை. இஸ்லாம், மனிதகுலத்துக்கு உண்மையின் பால் வழிகாட்ட வழங்கப்பட்ட மார்க்கமாகும். அவமதிப்பதும் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்துவதும் பலஹீனமானவர்களின் ஆயுதமாகும். எனவே, நன்மையையும் அமைதியையும் விரும்புகின்ற எந்த முஸ்லிமிடமும் மற்றவர்களை அவமரியாதை செய்கின்ற வார்த்தைகளோ சப்தங்களோ வெளிப்படுவது முறையல்ல. அம்மாதிரியானச் செயல்கள் மக்களை நம்மை விட்டும் தூரமாக்கும் என்பதோடு மட்டுமல்லாமல், நமக்கும் அவர்களுக்கும் மத்தியில் ஏற்படுத்தப்பட்டுள்ள உறவையும் பாதிக்கும். அது அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் ”ரஹ்மத்” எனும் அருட்கொடை யிலிருந்து நம்மை தூரமாக்கி விடலாம்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

இன்று உலகின் பல்வேறு இடங்களில், மார்க்கத்தின் பெயரால் சில பிரிவார் அமைதியின்மையையும் வன்முறையையும் ஏற்படுத்தி வருகிறார்கள். அவர்களின் அச்செயல்கள் மிகப் பெரிய அளவில் வெறுப்பையும், பகைமையையும், மரணத்தையும் உருவாக்கியுள்ளன. இது மிகவும் கவலைக்குரிய விஷயமாகும். இதனால் யாரும் வெற்றி பெறப் போவதில்லை என்பது மட்டுமல்ல, அனைவருக்கும் நஷ்டமே ஏற்படும்.

நன்னடத்தையுடன் காணப்படும் ஒரு தனிநபருக்கு - அவர் முஸ்லிமாக இருந்தாலும் சரி, முஸ்லிமல்லாதவராக இருந்தாலும் சரி- அழிவையோ மரணத்தையோ ஏற்படுத்துவது நியாயமல்ல என்றிருக்க, இன்று எந்தத் தவறையும் செய்யாத அப்பாவிக் குழந்தைகள் முதற்கொண்டு

முதியவர்கள் வரை மில்லியன் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள் ளார்களே இது எவ்வாறு நியாயமாகும்?

சிலர், மனிதகுலத்தை அழிக்க முயற்சி செய்து கொண்டிருந்த போதிலும் உலக மக்களுக்கு நன்மையை ஏற்படுத்துவோரில் நின்றும் ஆகுவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும்.

வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!

பல நம்பிக்கைகளைக் கொண்ட, பல இன மக்கள் வசிக்கின்ற நாட்டில் வாழுகின்ற முஸ்லிம்கள் எனும் ரீதியில், சிங்கப்பூர் முஸ்லிம்கள், இங்கு காணப்படும் பலதரப்பட்ட நம்பிக்கைகளை, அமைதியாக, ஒன்றுபட்டு வாழ்வதற்குத் தடையானவையாகக் கருதக்கூடாது. மற்ற நம்பிக்கைகள் மற்றும் கருத்துக்களைக் கொண்டுள்ள மக்களை விட்டும் நம்மை பிரித்து விடக் கூடிய சண்டைத் தகறாறுகள், பகைமை மற்றும் மோதல்களுக்கு நாம் இடமளித்து விடக் கூடாது. வெறுப்பையும் கோபத்தையும் தூண்டுகின்ற நபர்களை, இந்நாட்டில் நாம் அனுபவித்து வரும் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை அழிக்கத் துடிக்கின்ற நபர்களை நாம் அனுமதிக்கக் கூடாது.

அமைதியைப் பரப்பும் இஸ்லாமியக் கொள்கையை நாம் உண்மையாக பற்றிப் பிடிக்க வேண்டும். அமைதி, சாந்தி, சமாதானம் ஆகியவை நமது சொல்லிலும் செயலிலும் பிரதிபலிக்க வேண்டும். இஸ்லாத்தின் இக்கொள்கையை நாம் உறுதியாகப் பற்றிப் பிடித்தால் நாம் எப்போதும் அமைதியை விரும்புபவர்களாகவும், அனைவருக்கும் நன்மையை

ஏற்படுத்த விரும்புபவர்களுக்கு உதவி செய்பவர்களாகவும் ஆகி விடுவோம்.

மக்காவிலிருந்து ”ஹிஜ்ரத்” (தியாகப் பயணம்) செய்து மதீனாவுக்கு வந்ததும் இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களால் கூறப்பட்ட முதல் கருத்து பின்வருமாறு:

يا أيها الناس ، أفشوا السلام ، وأطعموا الطعام ، وَصِلُوا الأَرحام ،

وَصَلُّوا والناس نيام تدخلوا الجنة بسلام .

பொருள்: மனிதர்களே! அமைதியைப் பரப்புங்கள்! (பசித்தவருக்கு) உணவளியுங்கள்! உறவினர்களுடன் சேர்ந்து வாழுங்கள்! மக்கள் இரவில் அயர்ந்து தூங்கும் போது எழுந்து தொழுங்கள்! அந்நிலையில், நீங்கள் பாதுகாப்பாக சொர்க்கம் செல்வீர்கள். (ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் திர்மிதி ரஹ், இமாம் இப்னு அபீ ஷைபா ரஹ்)

ஜமாஅத்தார்களே!

புனிதமிக்க இந்த ஷஃபான் மாதத்தில் அல்லாஹ்வின் மன்னிப்பையும் கிருபையையும் நாம் எதிர்பார்ப்பது போல் நமது அன்றாட வாழ்விலும் கிருபை மற்றும் கருணைச் சிந்தனைகள் பிரதிபலிக்க வேண்டும். நம்மைப் பற்றி நாம் சிந்திப்போமாக! நமது சன்மார்க்கச் செயல்பாடுகளைப் பலப்படுத்துவோமாக! அப்போது நாம், அமைதி தேவைப்படுவோருக்கு

அமைதியை ஏற்படுத்துவோரின் வரிசையில் முன்னணியில் அமையலாம். அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா இம்மையில் நமக்கு மகிழ்ச்சியையும் மறுமையில் நிரந்தரமான வெற்றியையும் வழங்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

بَارَكَ اللهُ لِي وَلَكُمْ فِي الْقُرْآنِ الْعَظِيْمِ، وَنَفَعَنِي وَإِيَّاكُمْ بِمَا فِيْهِ مِنَ الآيَاتِ وَالذِّكْرِ الْحَكِيْمِ، وَتَقَبَّلَ مِنِّي وَمِنْكُمْ تِلَاوَتَهُ إِنَّهُ هُوَ السَّمِيْعُ الْعَلِيْمُ، أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيْمَ لِي وَلَكُمْ، وَلِسَائِرِ الْمُسْلِمِيْنَ وَالْمُسْلِمَاتِ، وَالْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنَاتِ، فَاسْتَغْفِرُوهُ فَيَا فَوْزَ الْمُسْتَغْفِرِيْنَ وَيَا نَجَاةَ التَّائِبِيْنَ.